©
GOVERNMENT OF TAMIL NADU
2023

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 18.40 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 356A] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 11, 2023
புரட்டாசி 24, சோபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2054

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

| | பக்கங்கள் |
|---|---|
| **சட்டமுன்வடிவுகள்:** | |
| எண் 31/2023—2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டம் .. .. .. .. .. | 2-8 |
| எண் 32/2023—2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் திருத்தச் சட்டம் .. .. .. .. .. .. | 9-12 |
| எண் 33/2023–2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டம் .. | 13-32 |
| எண் 34/2023–2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 3) சட்டம் .. .. .. | 33-40 |
| எண் 35/2023–2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 4) சட்டம் .. .. .. | 41-44 |
| எண் 36/2023–2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 5) சட்டம் .. .. .. | 45-46 |



DTP—Ex-IV-1-T(356A)

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/2023**

## 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாக குறித்திடலாகும். அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2–ஆம் பிரிவின் திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 27/1989.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடுவதான) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில்,—

(1) (8–b) ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

மையச் சட்டம் 1/1956.

"(8–c) "உழவர் உற்பத்தியாளர் நிறுமம்" என்பது, 1956 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின்கீழ், உழவர்கள் வேளாண் குழுவினால், அவ்வாறு உருவாக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட ஓர் உற்பத்தியாளர் நிறுமம் என்று பொருள்படும்;";

(2) 14 ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(14–a) "இணையவழி வணிக பணித்தளம்" என்பது 8–B ஆம் பிரிவின்கீழ் வகைசெய்யப்பட்ட, எந்தவொரு வேளாண் விளைபொருளிலும் வணிகம் நடத்துவதற்காகவும் அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகளுக்காகவுமான ஒரு மின்னணு பணித்தளம் என பொருள்படும்;";

7–D ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

**3.** முதன்மைச் சட்டத்தின் 7–D ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"**7-D. பூசலைத் தீர்த்துவைத்தல்.**—நேரடி சந்தைப்படுத்துதல், தனியார் சந்தை முற்றம் அல்லது தனியார் சந்தை துணை முற்றம், 8–A ஆம் பிரிவின்கீழ் உரிமம் வைத்திருப்பவர், சிறப்பு மற்றும் துணை நிலை சந்தைகள் உள்ளடங்கிய சந்தைகளின் உரிமம் கொண்டிருப்பவர்களுக்கு இடையே அல்லது அவர்களுக்குள் எழும் பூசல் எதுவும், தீர்த்துவைத்தலுக்காக தொடர்புடைய விற்பனைக்குழுவின் செயலாளருக்கு குறித்தனுப்பப்படுதல் வேண்டும். செயலாளர், பூசல் ஏற்பட்ட தரப்பினர்களுக்கு கேட்பதற்கானதொரு தகுமான வாய்ப்பை வழங்கிய பின்பு முப்பது நாட்களுக்குள் சுருக்கமான முறையில் சிக்கலைத் தீர்வு செய்தல் வேண்டும்.".

7–E எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**4.** அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட முதன்மை சட்டத்தின் 7–D ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**7-E. மேல்முறையீடு.**— (1) 7–D ஆம் பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட செயலாளரின் ஓர் ஆணையினால் இடருற்ற எந்தவொரு நபரும், அத்தகைய ஆணை கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும் முறையிலும் மேல்முறையீட்டு அலுவலரான இயக்குநரிடம் ஒரு மேல்முறையீட்டினை தாக்கல் செய்ய வேண்டும்.

(2) மேல்முறையீட்டு அலுவலர், முப்பது நாட்களுக்குள் தரப்பினர்களுக்கு கேட்பதற்கான தகுமானதொரு வாய்ப்பு வழங்கிய பின்னர், ஒவ்வொரு மேல்முறையீட்டையும் முடித்து வைத்தல் வேண்டும்:

வரம்புரையாக, மேல்முறையீட்டு அலுவலர் கூறப்பட்ட கால அளவான முப்பது நாட்கள் காலாவதியான பின்னர், உரிய காலவரைக்குள் மேல்முறையீடு தாக்கல் செய்யாததற்கான போதுமான காரணம் மேல்முறையீட்டாளரால் காண்பிக்கப்பட்டால், மேல்முறையீட்டினை ஏற்றுக்கொள்ளலாம்.

(3) மேல்முறையீட்டு அலுவலர், அவ்வாறு செய்வது தேவையெனக் கருதுவாராயின், மேல்முறையீடு செய்யப்பட்ட ஆணையின் மீது, அவர் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய கால அளவிற்கு ஒரு தடையாணையை வழங்கலாம்.

(4) ஒரு மேல்முறையீட்டின் மீது பிறப்பிக்கப்பட்ட ஆணை இறுதியானதாகவும் தரப்பினர்களை கட்டுப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

8–A ஆம் பிரிவின் திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 8–A ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(1) 8 ஆம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இயக்குநர் அல்லது இதன்பொருட்டு அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற ஓர் அலுவலர், மாநிலம் முழுமைக்கும், இணையவழி வணிக பணித்தளம் வழியோ அல்லது பிறவாறாகவோ, வேளாண் விளைபொருள் எதனையும் வாங்குதல் அல்லது விற்றலை பொறுத்தவரையில், வாங்குதல், விற்றல் அல்லது ஏதேனும் பிற கொள்தகுநிலையில் இயங்குவதற்கு ஒரு நபருக்கு உரிமம் வழங்கலாம். உரிமம் வழங்கப்படுதலுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் மற்றும் அத்தகைய கட்டணத்துடனும் சேர்த்து செய்யப்படுதல் வேண்டும்;"

8–B மற்றும் 8–C எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**6.** அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட முதன்மைச் சட்டத்தின் 8–A ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவுகள் உட்புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:–

"**8-B. இணையவழி வணிக பணித்தளம்.**— (1) நபரெவரும், இந்தப் பிரிவின்கீழ் உரிமம் ஒன்றைப் பெறாமல் ஓர் இணையவழி வணிக பணித்தளத்தை நிறுவுதலும் இயக்குதலும் கூடாது.

(2) இணையவழி வணிக பணித்தளம் ஒன்றை நிறுவுவதற்கும் இயக்குவதற்குமான ஓர் உரிமம் வழங்கப்படுதலுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், இயக்குநரிடம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரிடமும் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும், அத்தகைய கட்டணம் மற்றும் பத்து இலட்சம் ரூபாய்க்கும் குறைவில்லாத ஒரு வங்கி உத்திரவாதத்துடன் சேர்த்து செய்யப்படுதல் வேண்டும்.

(3) இயக்குநர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய அலுவலர் எவரும், ஓர் உரிமத்தை அளிக்கலாம் அல்லது அளிக்க மறுக்கலாம்:

வரம்புரையாக, உரிமம் வழங்கப்படுதலுக்கான எந்தவொரு விண்ணப்பமும், விண்ணப்பதாரருக்கு கேட்பதற்கான ஒரு தகுமான வாய்ப்பு வழங்கப்பட்டாலன்றி நிராகரிக்கப்படுதல் கூடாது.

(4) இந்தப் பிரிவின்கீழ், உரிமம் வழங்கப்பட்ட ஒரு நபர், வகுத்துரைக்கப்படலாகிறவாறு இணையவழி வணிக பணித்தளத்துடன் தொடர்புடைய அனைத்து உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல் வேண்டும்.

(5) உரிமம் பெற்றவர், 24 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்படும் கட்டணத்திற்கு மிகாமல் விற்பனைக் குழுவினால் நிர்ணயிக்கப்படுகிறவாறான அத்தகைய வீதத்தில், எந்தவொரு வேளாண் விளைபொருளின் இணையவழி விற்பனைப் பரிவர்த்தனை ஒவ்வொன்றின் மீதும் பயனாளர் கட்டணத்தை வசூலிப்பதற்கு உரிமையுடையவராகிறார்:

வரம்புரையாக, அந்த வேளாண் விளைபொருள் உற்பத்தியாளரிடமிருந்து பயனாளர் கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுதல் கூடாது.

(6) இணையவழி வணிக பணித்தளத்தின் மூலமான வேளாண் விளைபொருளின் வர்த்தகமானது, வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய முறையில் செய்யப்படுதல் வேண்டும்.

**8-C. இணையவழி வணிக பணித்தளத்துடனான ஒருங்கிணைவு.**— தனியார் சந்தை முற்றம் அல்லது தனியார் சந்தை துணை முற்றத்தின் உரிமம் பெற்றவர், வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய படிவத்தில் மற்றும் அத்தகைய முறையில், இணையவழி வணிக பணித்தளத்துடனான ஒருங்கிணைவிற்கான அனுமதிக்காக, அரசிடம் அல்லது அதன் ஏதேனும் முகமையிடம் விண்ணப்பிக்கலாம்.''.

10 ஆம் பிரிவின் திருத்தம்.

7. முதன்மைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவில், 2 ஆம் உட்பிரிவில் (a) கூறின் வரம்புரைக்காக பின்வரும் வரம்புரைகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

''வரம்புரையாக, உழவர்களில் ஒருவர், உழவர் உற்பத்தியாளர் நிறுமம் ஒன்றைச் சேர்ந்தவராய் இருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, அறிவிக்கை செய்யப்பட்ட பகுதி எதனையும் பொறுத்து ஒன்றுக்கும் மேற்பட்ட வேளாண் விளைபொருள் அறிவிக்கை செய்யப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய நியமனமானது, நடைமுறையில் கூடுமானவரையில், அந்த அறிவிக்கை செய்யப்பட்ட பகுதியில் உள்ள அறிவிக்கை செய்யப்பட்ட அனைத்து வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்களின் நலனைப் பாதுகாத்தல் வேண்டும்;''.

24 ஆம் பிரிவின் திருத்தம்.

8. முதன்மைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில்,—

(1) (1) ஆம் உட்பிரிவிற்கு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''வரம்புரையாக, ஒரு மாநிலத்திற்குள் அறிவிக்கை செய்யப்பட்ட சந்தைப் பகுதி எதனிலும் வாங்கப்படும் அல்லது விற்பனை செய்யப்படும் அறிவிக்கை செய்யப்பட்ட வேளாண் விளைபொருள் எதன் மீதும் ஒன்றுக்கு மேற்பட்ட முறை கட்டணம் எதுவும் விதிக்கப்படுதல் கூடாது.'';

(2) (2) ஆம் உட்பிரிவிற்கு, வரம்புரைக்குப் பின்பு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"மேலும் வரம்புரையாக, அறிவிக்கை செய்யப்பட்ட வேளாண் விளைபொருள் எதுவும், கட்டணம் விதிக்க கடப்பாடுடையதல்ல அல்லது செலுத்தத்தக்க கட்டணம் இந்தப் பிரிவின்கீழ் ஏற்கனவே செலுத்தப்பட்டுவிட்டது என்பதை மெய்ப்பிக்கும் சுமை, நேர்விற்கேற்ப, அத்தகைய கடப்பாடின்மை அல்லது அத்தகைய செலுத்தத்தைக் கோரும் நபரின் மீது இருத்தல் வேண்டும்.".

46–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

9. முதன்மைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது;–

**46-A. செயலாளரின் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் கடமைகள்.**— செயலாளரானவர்,—

(i) விற்பனைக்குழுவின் தலைமைச் செயல் அலுவலராக இருத்தல் வேண்டும்;

(ii) விற்பனைக்குழுவால் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவருதல் வேண்டும்;

(iii) விற்பனைக்குழுவின் பணியாளர் மீதான கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பைச் செலுத்துதல் வேண்டும்;

(iv) விற்பனைக்குழுவால் விதிக்கப்படும் அல்லது அதற்கு கொடுக்கப்பட வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற தொகைகள் வசூலிப்பதை உறுதி செய்தல் வேண்டும்;

(v) விற்பனைக்குழுவின் பொருட்டு, பெறப்பட்ட அனைத்து தொகைகள் மற்றும் செய்யப்பட்ட செலுத்தத்திற்காக பொறுப்புடையவராதல் வேண்டும்;

(vi) விற்பனைக் குழு மற்றும் துணைக்குழுக்களின் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் மற்றும் விவாதத்தில் பங்கேற்றல் வேண்டும்;

வரம்புரையாக, செயலாளர், வாக்களிப்பதற்கு உரிமையுடையவராகார்.

(vii) விற்பனைக்குழுவால் குறிப்பிடப்பட்ட பொருட்பாடுகளுக்கு அறிவுரை வழங்குதல் வேண்டும்;

(viii) சந்தைகளில் அனைத்து கட்டுமான பணிகளைக் கண்காணித்தல் வேண்டும்;

(ix) சந்தைகளின் முறையான செயல்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு ஆய்வு மேற்கொள்ளுதல் வேண்டும்."

10. முதன்மைச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலுக்காக, பின்வரும் இணைப்புப் பட்டியலானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– இணைப்புப்பட்டியலின் மாற்றீடு.

**"இணைப்புப் பட்டியல்**

**[2(1) ஆம் பிரிவைக் காண்க]**

**வேளாண் விளைபொருளின் பெயர்கள்**

1. நெல்.
2. சோளம் (Jower).
3. கம்பு (Bajra).
4. கேழ்வரகு
5. மக்காச்சோளம்.
6. தினை.
7. குதிரைவாலி.
8. வரகு.
9. சாமை.
10. துவரம்பருப்பு (முழுத்துவரை).

11. கருப்பு உளுந்து (முழு உளுந்து).
12. பச்சைப்பயறு (முழுப் பச்சைப்பயறு).
13. கொண்டைக்கடலை (முழுக்கொண்டைக்கடலை).
14. மொச்சை.
15. காராமணி.
16. கொள்ளு.
17. கல்லுப்பயறு.
18. வேர்க்கடலை (தோலோடு உள்ள அல்லது தோல் நீக்கப்பட்ட முழு கடலை).
19. நல்லெண்ணெய் அல்லது எள் விதை அல்லது எள்.
20. ஆமணக்கு (தோலோடு உள்ள அல்லது தோல் நீக்கப்பட்ட).
21. சூரியகாந்தி விதைகள் அல்லது கொட்டைகள்.
22. பருத்தி விதைகள்.
23. வேப்ப விதைகள்.
24. புகையிலை.
25. செங்காந்தள் விதைகள்.
26. மரவள்ளிக்கிழங்குகள்.
27. மிளகாய் அல்லது சிவப்பு மிளகாய்.
28. பூண்டு.
29. கொத்தமல்லி (தனியா விதைகள்).
30. ஏலக்காய்.
31. பாக்கு (முழுமையானது அல்லது உடைக்கப்பட்டது).
32. புளி (தோல் மற்றும் விதைகளுடன் அல்லது இல்லாமல்).
33. முந்திரிப்பருப்புகள்.
34. இஞ்சி (இஞ்சி, சுக்கு).
35. அனைத்து வகை மஞ்சள் (குண்டு அல்லது விரலி)
36. கரும்பு வெல்லம் (வெல்லப்பொடி, பழுப்புச் சர்க்கரை).
37. பனைவெல்லம்.
38. அனைத்துவகை கச்சா இரப்பர் மெல்லிய வெளிறிய மரப்பால், மெல்லிய அடிப்பகுதி மற்றும் மையவிலக்கப்பட்ட இரப்பர் மரப்பால், எஸ்டேட் ப்ரவுன் மெல்லிய இரகங்கள் உள்ளடங்கலாக அனைத்து வகையான இரப்பர் விரிப்புகள்.
39. அனைத்து வகை பருத்திபட்டு.
40. தேங்காய் (இளநீர் நீங்கலாக அனைத்துவகையிலும்)''.

**நோக்கக் காரண விளக்கவுரை**

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1989) சுதந்திரமான வணிக நடைமுறைகளை சாத்தியமாக்குகிறது. உழவர்கள் தங்களது வேளாண் விளைபொருட்களைத் தங்களுக்கு விருப்பமான எந்தச் சந்தையிலும் விற்பதற்குச் சுதந்திரம் உள்ளது. எண்ம (Digital) முறைக்கு மாற்றுவதன் மூலம் பணப் பரிவர்த்தனைகளைத் தவிர்த்துவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உழவருக்கு மேம்பட்ட விலையைக் கண்டறியவும் அவர்களது நலனைப் பாதுகாக்கவும், சந்தைப்படுத்துதல்/வணிகத்தில், பெருமஅளவிலான எண்ம தொழில்நுட்பத்தின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப கூறப்பட்ட சட்டத்தைத் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது.

2. மேற்கண்ட நோக்கங்களைக் கவனத்தில் கொண்டு, அரசு வேளாண்மை–உழவர் நலத் (வேவி3) துறை, 31.03.2022 தேதியிட்ட அரசாணை (3ப) எண்.24 இன் மூலம் விற்பனைக்குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மேம்பட்ட செயல்பாடுகளுக்காக உரிய மாற்றங்களைப் பரிந்துரை செய்யவும், கருத்துகளைத் தெரிவிக்கவும் 13 உறுப்பினர்களைக் கொண்ட ஓர் உயர்மட்டக் குழுவினை அமைத்துருவாக்கம் செய்தது. உரித்தமுடையோரிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு ஆட்சேபணைகளையும் கருத்துகளையும் பரிசீலித்ததன் பேரில், உயர்மட்டக் குழுவானது, கூறப்பட்ட சட்டத்தில் சில திருத்தங்களை பரிந்துரை செய்துள்ளது.

3. கூறப்பட்ட உயர்மட்டக்குழுவின் பரிந்துரைகளைக் கவனமுடன் பரிசீலித்த பின், நோக்கத்திற்காக, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 27/1989) தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்ட முன்வடிவு மேற்கண்ட முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,**
*வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2023 அக்டோபர் 11.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 32/2023**

## 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டத்தை திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 11/2020.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2–ஆம் பிரிவில், (a) கூறில், ''தேனீ வளர்ப்பு'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''கால்நடை பராமரிப்பு, உள்நாட்டு மீன்வளம்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

5–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 5–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு, பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கிய தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் அதிகார அமைப்பு என்ற பெயரில் ஓர் அதிகார அமைப்பானது இருத்தல் வேண்டும்:—

| | | |
|---|---|---|
| (i) | முதலமைச்சர் | – தலைவர், பதவி வழி; |
| (ii) | நீர்வளத்துறை அமைச்சர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (iii) | நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (iv) | வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (v) | தொழில்துறை அமைச்சர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (vi) | சட்டத்துறை அமைச்சர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (vii) | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (viii) | மீன்வளம், மீனவர் நலம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (ix) | உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (x) | நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xi) | சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xii) | அரசு தலைமைச் செயலாளர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xiii) | வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை – உழவர் நலத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – பதவி வழி உறுப்பினர்–செயலாளர்; |
| (xiv) | நீர்வளத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – பதவி வழி உறுப்பினர்; |

| | | |
|---|---|---|
| (xv) | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xvi) | தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xvii) | அரசு செயலாளர், சட்டத் துறை | – பதவி வழி உறுப்பினர்; |
| (xviii) | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xix) | கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xx) | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xxi) | நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xxii) | மனிதவள மேலாண்மைத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xxiii) | சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xxiv) | துணை வேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | – பதவி வழி உறுப்பினர்; |
| (xxv) | அரசால் முன்மொழியப்படலாகும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தை எடுத்துரைக்கும் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் | – உறுப்பினர்கள்; |
| (xxvi) | அரசால் முன்மொழியப்படலாகும் மூன்று விவசாயப் பிரதிநிதிகள் | – உறுப்பினர்கள் ; |
| (xxvii) | அரசால் முன்மொழியப்படலாகும் வேளாண் அறிவியல், தோட்டக்கலை அறிவியல் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் துறையில் ஒவ்வொன்றிலும் ஒரு நிபுணர். | – உறுப்பினர்கள்.''. |

4. முதன்மைச் சட்டத்தின், முதலாம் இணைப்புப் பட்டியலில், "5. புதுக்கோட்டை மாவட்டத்தின் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, திருவரங்குளம் மற்றும் கறம்பக்குடி வட்டாரங்கள்.'' என்ற உள்ளீட்டிற்குப் பின்பு, பின்வரும் உள்ளீடானது சேர்க்கப்படுதல் வேண்டும்:— முதலாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

"6. மயிலாடுதுறை மாவட்டம்.''.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

12.05.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/2020) கீழ் அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் அதிகார அமைப்பின் முதல் கூட்டத்தில்,—

(a) புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக சேர்த்துக்கொள்வதற்கும்;

(b) அந்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான ''வேளாண்மை'' எனும் சொல்லின் வரம்பிற்குள் ''கால்நடை பராமரிப்பு மற்றும் உள்நாட்டு மீன்வளம்'' என்பதை சேர்த்துக்கொள்வதற்கும்;

(c) நீர்வளத் துறை அமைச்சர், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர், நீர்வளத் துறையினைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் மற்றும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர் ஆகியோரை அதிகார அமைப்பின் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கு மதிப்பளிக்கும் வகையில், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 11/2020) தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,**
*வேளாண்மை—உழவர் நலத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2023 அக்டோபர் 11.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/2023**

**1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தினை மேலும், திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/1974

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடுவதான) 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின்–2 ஆம் பிரிவில்,–

(1) (1–A) கூறானது, (1–AA) கூறாக மறு எழுத்திடப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு (1–AA) கூறாக மறு எழுத்திடப்படுவதற்கு முன்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

“(1–A) “ஊர்தியின் விலை” என்பது நேர்விற்கேற்ப, அதிகாரமளிக்கப்பட்ட மொத்த விற்பனையாளரிடமிருந்தோ தயாரிப்பவரிடமிருந்தோ உறுதிப்படுத்தப்பட்டவாறு, விலைக்கு வாங்கும் நேரத்தில் செலுத்தப்பட்ட மொத்த விலை என்று பொருள்படும் மற்றும் இந்தியாவிற்கு வெளியிலிருந்து ஊர்தி இறக்குமதி செய்யப்படும் நேர்வில் வீட்டு பயன்பாட்டிற்காக, நுழைவுச்சீட்டிலிருந்து காட்டப்பட்டுள்ள மொத்த விலை என்று பொருள்படும்;”;

(2) (5) ஆம் கூறுக்காக, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

“(5) ”இயக்கூர்திகள் சட்டம்” என்பது 1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டம் என்று பொருள்படும். (மையச்சட்டம் 1988/59)”;

(5–A) “வகுத்துரைக்கப்பட்டது" என்பது, இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;”;

3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலும், (2) ஆம் உட்பிரிவிற்கான வகைமுறையிலும் உள்ள “அல்லது ஒன்பதாவது இணைப்புப்பட்டியலில்” என்ற சொற்றொடருக்குப் பின்பு, “அல்லது பத்தாம் இணைப்புப்பட்டியலில்” எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

3–A பிரிவிற்கான மாற்றீடு

**4.** முதன்மைச் சட்டத்தின் –3A ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “சாலையில் பயன்படுத்துவதற்கு ஏற்றதான இயக்கூர்திகளின்” என்ற சொற்றொடருக்காக, “மின்கலம் மற்றும் நீர்ம வடிவிலான பெட்ரோலியம் வாயு, அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு அல்லது நீர்ம வடிவிலான இயற்கை எரிவாயுவால் இயக்கப்படும் இயக்கூர்திகள் தவிர“எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

5. முதன்மைச் சட்டத்தின் 4–ஆம் பிரிவில்,– 4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1–A) ஆம் உட்பிரிவில்,–

(a) (a) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(a) இரண்டாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I, மூன்றாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I, ஐந்தாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I, ஏழாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I, அல்லது எட்டாம் இணைப்புப்பட்டியல், மற்றும் பத்தாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I, ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட இயக்கூர்திகளைப் பொறுத்து அதனை பதிவு செய்யும் போது, அத்தகைய ஊர்திகளின் வாழ்நாள் முழுவதற்கும் எடுக்கப்பட வேண்டிய உரிமத்தின் பேரில், நேர்விற்கேற்ப, இரண்டாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I, அல்லது மூன்றாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I, அல்லது ஐந்தாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I, அல்லது ஏழாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I, அல்லது எட்டாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I, அல்லது பத்தாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I, ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட வீதத்தில் வாழ்நாள் வரியானது செலுத்தப்படுதல் வேண்டும்;";

(b) (aa) கூறு மற்றும் (aaa) கூறுகளானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(c) (b) கூறுக்காக பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(b) இரண்டாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–II, மூன்றாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–II, ஐந்தாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–II, ஏழாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–II, எட்டாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–II, பத்தாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–II, ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட பழைய இயக்கூர்திகளைப் பொறுத்து, அத்தகைய ஊர்திகளின் வாழ்நாள் முழுவதும் எடுக்கப்பட வேண்டிய ஓர் உரிமத்தின் பேரில் அவற்றில் குறிப்பிடப்பட்ட வீதத்தில் வாழ்நாள் வரியானது செலுத்தப்படுதல் வேண்டும்;";

(d) (c) கூறில், "வகை 6 மற்றும் 7" எனும் சொற்றொடருக்காக "வகை 9" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(e) (c) கூறு மற்றும் அதன் கீழுள்ள விளக்கத்திற்குப் பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும்:–

"(d) முதலாம் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட கட்டுமான தளவாட ஊர்திகளைப் பொறுத்து, நேர்விற்கேற்ப, அந்த ஆண்டிற்கோ அல்லது வாழ்நாள் முழுவதற்குமோ அத்தகைய ஊர்திகளுக்கு எடுக்கப்பட வேண்டிய உரிமத்தின் பேரில், முதலாம் இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட வீதத்தில் விலையில் ஆண்டுதோறுமோ அல்லது பத்தாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I இல் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தில் அத்தகைய ஊர்திகளின் மற்றும் பகுதி–II–ல் குறிப்பிடப்பட்ட பழைய வாகனங்களின் வீதத்தில் வாழ்நாள் முழுவதுமோ வரி செலுத்தப்படுதல் வேண்டும்;";

(2) (1–B) ஆம் உட்பிரிவிலும் மற்றும் அதிலுள்ள வகைமுறையில் உள்ள "வகை 5–A" எனும் சொற்றொடருக்காக "வகை 6" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (4) ஆம் உட்பிரிவில், ''அல்லது எட்டாம் இணைப்புப்பட்டியலின் பகுதி–I–ல்'' எனும் சொற்றொடருக்காக ''அல்லது எட்டாம் இணைப்புப்பட்டியலில் அல்லது பத்தாம் இணைப்புப்பட்டியலில்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

**6.** முதன்மைச் சட்டத்தின், இணைப்புப்பட்டியல்களுக்காக, பின்வரும் இணைப்புப்பட்டியல்களானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– இணைப்புப் பட்டியல்களுக்கான மாற்றீடு.

## முதலாம் இணைப்புப்பட்டியல்
## (3 மற்றும் 6 ஆம் பிரிவுகளைக் காண்க)

| ஊர்திகளின் வகைகள் | வரி |
|---|---|
| (1) | (2) |
| 1. சரக்கு வண்டிகள். | ரூபாய். |
| | ஆண்டு வரி. |
| 3000 கிலோவுக்கு மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் சரக்கு வண்டிகள். | 3600 |
| | காலாண்டு வரி. |
| (a) 3000 கிலோவுக்கு மேற்பட்ட ஆனால் 5500 கிலோ மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் சரக்கு வண்டிகள். | 1425 |
| (a) 500 கிலோவுக்கு மேற்பட்ட ஆனால் 9000 கிலோவுக்கு மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் சரக்கு வண்டிகள். | 2000 |
| (b) 9000 கிலோவுக்கு மேற்பட்ட ஆனால் 12,000 கிலோவுக்கு மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் சரக்கு வண்டிகள். | 2400 |
| (c) 12,000 கிலோவுக்கு மேற்பட்ட ஆனால் 13,000 கிலோவுக்கு மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் சரக்கு வண்டிகள். | 2600 |
| (d) 13,000 கிலோவுக்கு மேற்பட்ட ஆனால் | 3100 |
| (e) 5,000 கிலோவுக்கு மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் சரக்கு வண்டிகள். | |
| (f) 15,000 கிலோவுக்கு மேற்பட்ட எடையேற்றப்பட்ட நிலையில் சரக்கு வண்டிகள். | 3100 |
| | 15000 கிலோவுக்கு எடையேற்றப்பட்டதற்கு மேல் ஒவ்வொரு 250 கிலோவுக்கு அல்லது அதனின் பகுதிக்கோ கூடுதலாக 100 ரூபாய்). |

| | |
|---|---|
| (g)15,000 கிலோவுக்கு மேற்பட்டட எடையேற்றப்பட்ட நிலையில் பல அச்சு சரக்கு வண்டிகள். | 3100 |
| | 15000 கிலோவுக்கு சுமத்தப்பட்ட எடைக்கு மேல் ஒவ்வொரு 250 கிலோவுக்கோ அல்லது அதன் பகுதிக்கோ கூடுதலாக 75 ரூபாய்). |
| (h) 4. 9. 10 மற்றும் 11 ஆகிய வகைகளின் கீழ் வருவனவற்றைத் தவிர, சரக்குகளை கொண்டு செல்வதற்கு பயன்படும் இழுவை வண்டிகள்.— | |
| (i) 3000 கிலோவுக்கு மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் ஒவ்வொரு இழுவை வண்டிக்கும். | 500 |
| (ii) 3000 கிலோவுக்கு மேற்பட்ட ஆனால் 5500 கிலோவுக்கு மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் ஒவ்வொரு இழுவை வண்டிக்கும். | 600 |
| (iii) 5500 கிலோவுக்கு மேற்பட்ட ஆனால் 9000 கிலோவுக்கு மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் ஒவ்வொரு இழுவை வண்டிக்கும். | 1000 |
| (iv) 9000 கிலோவுக்கு மேற்பட்ட ஆனால், 12000 கிலோவுக்கு மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் ஒவ்வொரு இழுவை வண்டிக்கும். | 1200 |
| (v) 12000 கிலோவுக்கு மேற்பட்ட ஆனால், 13000 கிலோவுக்கு மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் ஒவ்வொரு இழுவை வண்டிக்கும். | 1500 |
| (vi) 13000 கிலோவுக்கு மேற்பட்ட ஆனால், 15000 கிலோவுக்கு மேற்படாத எடையேற்றப்பட்ட நிலையில் ஒவ்வொரு இழுவை வண்டிக்கும். | 1800 |
| (vii) 15000 கிலோவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு வண்டிக்கும். | 1800 |
| | (15000 கிலோ சுமத்தப்பட்ட எடைக்கு மேல் ஒவ்வொரு 250 கிலோவுக்கோ அல்லது அதன் பகுதிக்கோ கூடுதலாக 75 ரூபாய்). |

2. வாடகைக்கு இயக்கப்படும் மற்றும் பயணிகளின் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் இயக்கூர்திகள் மற்றும் இயக்கூர்திகள் சட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டதைப் பொறுத்து,—

I. “சுற்றுலா ஊர்தி” அல்லது அதுவல்லாதது என வகைப்படுத்தப்பட்ட ஒப்பந்த ஊர்திகளாக மட்டும் இயக்கப்பட அனுமதிக்கப்பட்ட வாகனங்களில், ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்ட ஊர்திகள்,

| | |
|---|---|
| (a) ஊர்தியின் தரைப் பகுதியின் சதுர மீட்டர் ஒவ்வொன்றிற்கும் (ஓட்டுநர் நீங்கலாக), முப்பந்தைந்துக்கு மிகாத நபர்களை; | 4900 |
| (b) (ஓட்டுநர் நீங்கலாக) ஒவ்வொரு நபருக்கும் (ஓட்டுநர் நீங்கலாக) முப்பத்தைந்துக்கு மிகுதியான நபர்களை; | 3000 |
| II. (a) படுக்கையுடன் கூடிய ஆம்னி பேருந்து | ஒற்றைப்படுக்கை ஒன்றுக்கு 4000 |
| (b) இருக்கை மற்றும் படுக்கை ஆகிய இரண்டு வசதியுடன் கூடிய ஆம்னி பேருந்து. | ஒற்றைப்படுக்கை ஒன்றுக்கு 4000<br>ஒற்றை இருக்கை ஒன்றுக்கு 3,000. |

III. நிலை வண்டிகளாக இயக்கப்படுவதற்கு மற்றும் (ஓட்டுநர் மற்றும் நடத்துநர் நீங்கலாக) ஆறு நபர்களுக்கு மேல் ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்ட ஊர்திகள்,—

| | |
|---|---|
| (a) சென்னைப் பெருநகரப் பகுதிக்குள் பிரத்தியேகமாக இயங்கிக் கொண்டிருக்கிற - ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்ட ஊர்தியின் (ஓட்டுநர் மற்றும் நடத்துநர் நீங்கலாக) பயணி ஒவ்வொருவருக்கும். | 100+25 விழுக்காடு மேல்வரி. |
| (b) மதுரை நகர் அல்லது கோயம்புத்தூர் நகரத்தின் எல்லைக்குள் அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொடர் நகராட்சிகளின் வரம்பிற்குள் அல்லது பிற நகர சேவை வழித்தடங்களில் பிரத்தியேகமாக இயங்கிக் கொண்டிருக்கிற—ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்ட ஊர்தியின் (ஓட்டுநர் மற்றும் நடத்துர் நீங்கலாக) பயணி ஒவ்வொருவருக்கும். | 400+10 விழுக்காடு மேல்வரி. |
| (c) (a) மற்றும் (b) இனங்களின் கீழ் வருவனவற்றைத் தவிர வேறு வழித்தடங்கள் அல்லது பகுதிகளில் இயங்கிக் கொண்டிருக்கிற,— | |
| (i) “சேவையானது விரைவுசேவையாக” வகைப்படுத்தப்பட்டிருப்பின், ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்ட ஊர்தியின் (ஓட்டுநர் மற்றும் நடத்துநர் நீங்கலாக) பயணி ஒவ்வொருவருக்கும். | 450+25 விழுக்காடு மேல்வரி. |

| | |
|---|---|
| (ii) ‘‘விரைவு சேவை’’ (தொலைதூர சேவை) அல்லாத பிற சேவைகளின் நேர்வில், ஏற்றிச் செல்ல அனுமதிக்கப்பட்ட ஊர்தியின் (ஓட்டுநர் மற்றும் நடத்துநர் நீங்கலாக) சுமந்து செல்ல அனுமதிக்கப்பட்ட ஊர்தியின் பயணி ஒவ்வொருவருக்கும். | 450+கூடுதல் 25 விழுக்காடு. |

விளக்கம்.— இருப்பு நிலைவண்டி அல்லது மாற்றுப் பேருந்து ஒன்றினைப் பொறுத்து, செலுத்தப்படவேண்டிய வரியானது, அனுமதி வைத்திருப்பவரின் நிலைவண்டி எதற்காகவும், பயணி ஒருவருக்கு செலுத்தப்பட வேண்டிய அதிகபட்ச வீதத்தில் இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| 3. எந்தச் சுமைகளையும் தாமே சுமந்து செல்ல கட்டமைக்கப்படாத இயக்கூர்திகள் (நீர், எரிபொருள், குளிர்விப்பான்கள் மற்றும் உந்துதல் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் பிற உபகரணங்கள், தளர்கருவிகள், மற்றும் இழுத்துச்செல்ல மட்டுமே பயன்படுத்தப்படும் தளர் கருவிகள் ஆகியவற்றின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் பிற உபகரணங்கள் ஆகியவை தவிர),— | |
| (a) எடையேற்றப்படாத நிலையில், 2500 கிலோவுக்கு மிகாமல் எடையில். | 165 |
| (b) எடையேற்றப்படாத நிலையில், 2500 கிலோவுக்கு மிகையாக எடையில். | 240 |
| 4. தீயணைப்பு இயந்திரங்கள், தீயணைப்பு ஒப்பந்த ஊர்திகள் மற்றும் சாலை நீர் தெளிப்பான்கள். | |
| (a) எடையேற்றப்பட்ட நிலையில், 1000 கிலோவுக்கு மிகாமல் | 45 |
| (b) எடையேற்றப்பட்ட நிலையில் 1000 கிலோவுக்கு மிகையான ஆனால் 1500 கிலோவுக்கு மிகாமல். | 60 |
| (c) எடையேற்றப்பட்ட நிலையில் 1500 கிலோவுக்கு மிகையான ஆனால் 2000 கிலோவுக்கு மிகாமல். | 75 |
| (d) எடையேற்றப்பட்ட நிலையில் 2000 கிலோவுக்கு மிகையான ஆனால் 3000 கிலோவுக்கு மிகாமல். | 90 |
| (e) எடையேற்றப்பட்ட நிலையில் 3000 கிலோவுக்கு மிகையான ஆனால் 4000 கிலோவுக்கு மிகாமல் | 105 |
| (f) எடையேற்றப்பட்ட நிலையில் 4000 கிலோவுக்கு மிகையான ஆனால் 5500 கிலோவுக்கு மிகாமல் | 120 |
| (g) எடையேற்றப்பட்ட நிலையில் 5500 கிலோவுக்கு மிகையான ஆனால் 7500 கிலோவுக்கு மிகாமல் | 150 |
| (h) எடையேற்றப்பட்ட நிலையில் 7500 கிலோவுக்கு மிகையான ஆனால் 9000 கிலோவுக்கு மிகாமல் | 180 |
| (i) எடையேற்றப்பட்ட நிலையில் 9000 கிலோவுக்கு மிகையாக. | 200 |
| (j) தீயணைப்பு இயந்திரங்கள், இழுவை வண்டிகள் பம்புகள் உள்ளடங்கலான இழுவை வண்டிகள் இழுப்பதற்கு பயன்படுத்தப்படும் அத்தகைய ஊர்திகளைப் பொறுத்த நேர்வில், செலுத்தப்பட வேண்டிய கூடுதல் வரி,— | 30 |
| (i) எடையேற்றப்பட்ட நிலையில் 1000 கிலோவுக்கு மிகாத ஒவ்வொரு இழுவை வண்டிக்கும் | |
| (ii) எடையேற்றப்பட்ட நிலையில் 1000 கிலோவுக்கு மிகையான ஆனால் 2000 கிலோவுக்கு மிகாத ஒவ்வொரு இழுவை வண்டிக்கும். | 45 |
| (iii) எடையேற்றப்பட்ட நிலையில் 2000 கிலோவுக்கு மிகையான ஒவ்வொரு இழுவை வண்டிக்கும். | 75 |

| | |
|---|---|
| வரம்புரையாக, ஒரே இழுவை வண்டியைப் பொறுத்து, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊர்திகளானது, இந்த வகையின்படி வரிவிதிக்கத்தக்கதாக இருத்தல் கூடாது. | |
| 5. எடையேற்றப்படாத நிலையில் 600 கிலோவுக்கு மிகாத மிதி இயக்கிகள் (இயந்திர சக்தியின் மூலம் அதனை முன்னோக்கிச் செலுத்துவதற்கான இணைப்புடன் கூடிய மூன்று சக்கர மிதிவண்டிகள், துள்ளுந்துகள் மற்றும் மிதிவண்டிகள் ஆகியவை உள்ளடங்கலாக) | ஆண்டு வரி (ரூ.) |
| (a) ஒரு இழுவை வண்டி அல்லது பக்க இருக்கையுடனான அல்லது அவ்வாறல்லாத 50 CC க்கு மிகையான ஆனால் 75 CC க்கு மிகாத இரு சக்கர மிதிவண்டிகள். | 135 |
| (b) ஒரு இழுவை வண்டி அல்லது பக்க இருக்கையுடனான அல்லது அவ்வாறல்லாத 75 CC க்கு மிகையான ஆனால் 170 CC க்கு மிகாத இரு சக்கர மிதிவண்டிகள். | 200 |
| (c) ஒரு இழுவை வண்டி அல்லது பக்க இருக்கையுடனான அல்லது அவ்வாறல்லாத 170 CC க்கு மிகையான இரு சக்கர மிதிவண்டிகள். | 240 |
| 6. பயணிகளின் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் மற்றும் வாடகைக்கு இயக்கப்படும் இயக்கூர்திகள் மற்றும், இயக்கூர்திகள் சட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டதைப் பொறுத்து, அனைத்தையும் சுமந்து செல்வதற்கான இயக்கூர்திகள். | ஐந்தாண்டு வரி (ரூ.) |
| (a) மூன்று நபர்களுக்கு மேற்பட்டு, ஆனால் ஓட்டுநர் உள்ளடங்கலாக நான்கு நபர்களுக்கு மிகாமல். | 1400 |
| (b) நான்கு நபர்களுக்கு மேற்பட்டு, ஆனால் ஓட்டுநர் உள்ளடங்கலாக ஆறு நபர்களுக்கு மிகாமல் (வழக்கமுறை இயக்க அளவுக் கருவி பொறுத்தப்பட்ட வாடகைச் சீருந்து மற்றும் பங்குமுறை தானியங்கி இழுப்பூர்திக்கு) | 6000 |
| 7. எடையேற்றப்பட்ட நிலையைப் பொருட்படுத்தாது, கருவிகள் அல்லது மின்னாக்குக்கருவிகள் அல்லது அழுத்தக் கருவிகள் போன்ற தளவாடங்களுடன் பொருத்தப்பட்ட ஊர்திகள் அல்லது இழுவை வண்டிகள். | ஆண்டு வரி (ரூ.) 5000 |
| 8. கட்டுமானத் தளவாட ஊர்தி | 15000 |

| 9. இந்த இணைப்புப் பட்டியலின் முன்சென்ற வகைமுறைகளின் கீழ் வரிவிதிக்கத்தக்கவை அல்லாத பிற இயக்கூர்திகள்,– | இறக்குமதி செய்யப்பட்ட ஊர்திகள் | இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஊர்திகள் | |
|---|---|---|---|
| | | தனி நபருக்கு சொந்தமானவை | பிற நபர்களுக்கு சொந்தமானவை |
| | | ஆண்டு வரி | |
| | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| (a) எடையேற்றப்படாத நிலையில், 700 கிலோவுக்கு மேற்படாத எடைக்கு | 2000 | 700 | 1400 |
| (b) எடையேற்றப்படாத நிலையில் 700 கிலோவுக்கு மேற்பட்டு, ஆனால் 1500 கிலோவுக்கு மேற்படாத எடைக்கு | 2600 | 900 | 1800 |

| | | | |
|---|---|---|---|
| (c) எடையேற்றப்படாத நிலையில் 700 கிலோவுக்கு மேற்பட்டு, ஆனால் 1500 கிலோவுக்கு மேற்படாத எடைக்கு | 2600 | 900 | 1800 |
| (d) எடையேற்றப்படாத நிலையில் 1500 கிலோவுக்கு மேற்பட்டு, ஆனால் 2000 கிலோவுக்கு மேற்படாத எடைக்கு | 3000 | 1100 | 2200 |
| (e) எடையேற்றப்படாத நிலையில், 2000 கிலோவுக்கு மேற்பட்டு, ஆனால் 3000 கிலோவுக்கு, மேற்படாத எடைக்கு | 3200 | 1300 | 2600 |
| (f) இயக்கூர்திகள் சட்டத்தின்கீழ், தனியார் போக்குவரத்து ஊர்திக்கான அனுமதி. தேவையில்லாததைப் பொறுத்து, எடையேற்றப்படாத நிலையில் 3000 கிலோவுக்கு மிகையான எடைக்கு. | 3700 | 1400 | 2800 |

விளக்கம்.— இந்த வகையின் நோக்கத்திற்காக "தனி நபர்" என்ற சொல்லானது, தனது முறையான பெயரால் அறியப்படும் ஒரு நபர் என்று பொருள்படும்.

| | |
|---|---|
| 10. எடை ஏற்றப்படாத நிலையில் 3000 கிலோவுக்கு மிகையான எடையில் இந்த இணைப்புப்பட்டியலின் முன்சென்ற வகைமுறைகளின் கீழ் வரிவிதிக்கத்தக்கவை நீங்கலாக மற்றும் தனியார் போக்குவரத்து ஊர்தி அனுமதியினால் உள்ளடக்கப்பட்ட, மற்றும் இயக்கூர்திகள் சட்டத்தின்கீழ், தனியார் போக்குவரத்து ஊர்திக்கான அனுமதி தேவையானதைப் பொறுத்தும் உள்ள பிற இயக்கூர்திகள். | காலாண்டு வரி. (ரூ.) |
| (a) கல்வி நிறுவனங்களுக்கு சொந்தமான ஊர்திகளைப், (கல்வி நிறுவனப் பேருந்து) பொறுத்து— | |
| (i) பள்ளி மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பயணிக்க (ஓட்டுநர் நீங்கலாக) ஊர்தி சுமந்து செல்ல அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் | 75 |
| (ii) கல்லூரி மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பயணிக்க (ஓட்டுநர் நீங்கலாக) ஊர்தி சுமந்து செல்ல அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் | 125 |
| (b) பிற நேர்வுகளில் (ஓட்டுநர் நீங்கலாக) ஊர்தி சுமந்து செல்ல அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும்,— | |
| (i) குளிர் சாதன வசதியுடன் | 900 |

| | |
|---|---|
| (ii) குளிர்சாதன வசதியின்றி. | 600 |

வரம்புரையாக, இயக்கூர்திகள் சட்டத்தின் 87 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (a), (b) அல்லது (c) இனங்களில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக, கல்வி நிறுவனப் பேருந்துகள் மற்றும் தற்காலிக அனுமதி வழங்கப்பட்ட பிற ஊர்திகள் ஆகியவையானது, ஓட்டுநர் இருக்கை நீங்கலாக, பின்வரும் வீதத்தில் தனித்த வரியினைச் செலுத்துதல் வேண்டும்:—

| | |
|---|---|
| (i) தொடர்புடைய நிறுவனத்தின் மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் கல்வி நிறுவன பேருந்துகள். | ஏழு நாட்களுக்கு, அல்லது அதனின் ஒரு இருக்கைக்கு ரூ.45/. |
| (ii) தொடர்புடைய நிறுவனத்தின் பணியாளர்களின் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்படும் பிற ஊர்திகள். | ஏழு நாட்களுக்கு, அல்லது அதனின் ஒரு இருக்கைக்கு ரூ.100/. |
| (iii) மேற்காணும் (i) மற்றும் (ii) ஆம் கூறுகளில் குறிப்பிடப்பட்டவை தவிர, பிற நோக்கங்கள் எதற்காகவும் பயன்படுத்தப்படும் கல்வி நிறுவனப் பேருந்துகள் மற்றும் பிற ஊர்திகள். | நாள் ஒன்றுக்கு ஒரு இருக்கைக்கு ரூ.45/— |
| 11. இழுவை வண்டிகளின் இழுவைக்காக, பயன்படுத்தப்பட்ட 9 மற்றும் 10 ஆம் கூறுகளில் குறிப்பிடப்பட்ட ஊர்திகளைப் பொறுத்து செலுத்தப்பட வேண்டிய கூடுதல் வரி. | |
| (i) எடையேற்றப்படாத நிலையில், 1 டன்னுக்கு மிகாத ஒவ்வொரு இழுவை வண்டிக்கும். | 30 |
| (ii) எடையேற்றப்படாத நிலையில் 1 டன்னுக்கு மிகையான ஒவ்வொரு இழுவை வண்டிக்கும். | 45 |

வரம்புரையாக, ஒரே இழுவை வண்டிகளைப் பொறுத்து, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊர்திகளானது, 9ஆம் வகை அல்லது 10 ஆம் வகை அல்லது 11 ஆம் வகை ஆகியவற்றின்படி வரி விதிக்கத்தக்கதல்ல.

| | |
|---|---|
| 12. சிறப்பு அனுமதியின் கீழ், சிறப்பு நிகழ்வுகளில், ஒப்பந்த வண்டிகளாக இயக்கப்படுகின்ற, (ஓட்டுநர் மற்றும் நடத்துனர் நீங்கலாக ஆறு நபர்களுக்கு மேலாக ஏற்றி செல்லும்) இருப்பு நிலை ஊர்தி அல்லது மாற்றுப் பேருந்து. | நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.20. |

## இரண்டாம் இணைப்புப் பட்டியல்
## (4(1–A) (bb) ஆம் பிரிவைக் காண்க.)

### பகுதி—I

புதிய மிதி இயக்கி.

| பதிவு செய்யும் நேரத்தில் ஊர்தியின் மொத்த விலையானது,— | வாழ்நாள் வரி வீதம் (ஊர்தியின் விலையின் விழுக்காடு) |
|---|---|
| (i) ஒரு லட்சம் ரூபாய்க்கு மிகாதபோது. | 10 விழுக்காடு |
| (ii) ஒரு லட்சம் ரூபாய்க்கு மிகும்போது | 12 விழுக்காடு |

பகுதி—II
பழைய மிதி இயக்கி

இயக்கூர்திகள் சட்டத்தின் 47 ஆம் பிரிவின்கீழ் புதிய பதிவுக் குறியீடானது குறித்தொதுக்கப்படும் நேரத்தில் அல்லது இந்த மாநிலத்தில் இயங்கிக் கொண்டுள்ள மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள பழைய மிதி இயக்கிகள் மற்றும் அத்தகைய பதிவு செய்யப்பட்ட மாதத்திலிருந்து அதன் ஆயுள் காலமானது,—

| | வாழ்நாள் வரி வீதம் (ஊர்தியின் விலையின் விழுக்காடு) ஊர்தியின் விலை | |
|---|---|---|
| | ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்படாத போது | ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்படும் போது |
| 1. ஓர் ஆண்டுக்கு மேற்படாமல் இருப்பின் | 8.25 விழுக்காடு | 10.25 விழுக்காடு |
| 2. ஓர் ஆண்டுக்கு மேற்பட்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 8.00 விழுக்காடு | 10.00 விழுக்காடு |
| 3. இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் மூன்று ஆண்டுகளுகக்கு மேற்படாமல் இருப்பின் | 7.75 விழுக்காடு | 9.75 விழுக்காடு |
| 4. மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 7.50 விழுக்காடு | 9.50 விழுக்காடு |
| 5. நான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 7.25 விழுக்காடு | 9.25 விழுக்காடு |
| 6. ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் ஆறு ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 7.00 விழுக்காடு | 9.00 விழுக்காடு |
| 7. ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 6.75 விழுக்காடு | 8.75 விழுக்காடு |
| 8. ஏழு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆனால் எட்டு ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 6.50 விழுக்காடு | 8.50 விழுக்காடு |
| 9. எட்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் ஒன்பது ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 6.25 விழுக்காடு | 8.25 விழுக்காடு |
| 10. ஒன்பது ஆண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் பத்து ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 6.00 விழுக்காடு | 8.00 விழுக்காடு |
| 11. பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்டு ஆனால் பதினொரு ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 5.75 விழுக்காடு | 7.75 விழுக்காடு |
| 12. பதினொரு ஆண்டுகளுக்கு மேற்பட்டு இருப்பின் | 5.50 விழுக்காடு | 7.50 விழுக்காடு |

## மூன்றாம் இணைப்புப்பட்டியல்
## (4(1–A) ஆம் பிரிவைக் காண்க)
## பகுதி–I
## புதிய மிதி இயக்கிகள்.

| பதிவு செய்யும் நேரத்தில் ஊர்தியின் மொத்த விலையானது,– | வாழ்நாள் வரி வீதம் (ஊர்தியின் மொத்த விலையின் விழுக்காடு) |
|---|---|
| (i) 5 லட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் இருப்பின் | 12 விழுக்காடு |
| (ii) 5 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் 10 லட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் இருப்பின் | 13 விழுக்காடு |
| (iii) 10 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் 20 லட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் இருப்பின் | 18 விழுக்காடு |
| (iv) 20 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு இருப்பின் | 20 விழுக்காடு |

## பகுதி–II
## பழைய மிதி இயக்கிகள்

| இயக்கூர்திகள் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் கீழ் புதிய பதிவுக் குறியீடானது குறித்தொதுக்கப்படும் நேரத்தில் அல்லது இந்த மாநிலத்தில் இயங்கிக் கொண்டுள்ள மற்றும் பதிவு செய்யப்படுள்ள பழைய இயக்கூர்திகள் மற்றும் அத்தகைய பதிவு செய்யப்பட்ட மாதத்திலிருந்து அதன் ஆயுள் காலமானது,– | வாழ்நாள் வரி வீதம் (ஊர்தி விலையின் விழுக்காடு) | | | |
|---|---|---|---|---|
| | 5 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு இருப்பின் | 5 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 10 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு இருப்பின் | 10 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால் 20 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு இருப்பின் | 20 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு இருப்பின் |
| 1. ஓர் ஆண்டுக்கு மேற்படாமல் இருப்பின் | 10.75 விழுக்காடு | 11.75 விழுக்காடு | 16.75 விழுக்காடு | 18.75 விழுக்காடு |
| 2. ஓர் ஆண்டுக்கு மேற்பட்டு ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 10.50 விழுக்காடு | 11.50 விழுக்காடு | 16.50 விழுக்காடு | 18. 50 விழுக்காடு |
| 3. இரண்டு ஆண்டுக்கு மேற்பட்டு ஆனால் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 10.25 விழுக்காடு | 11.25 விழுக்காடு | 16.25 விழுக்காடு | 18.25 விழுக்காடு |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. மூன்று ஆண்டுக்கு மேற்பட்டு ஆனால் நான்கு ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 10.00 விழுக்காடு | 11.00 விழுக்காடு | 16.00 விழுக்காடு | 18.00 விழுக்காடு |
| 5. நான்கு ஆண்டுக்கு மேற்பட்டு ஆனால் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாமல் இருப்பின் | 9.75 விழுக்காடு | 10.75 விழுக்காடு | 15.75 விழுக்காடு | 17.75 விழுக்காடு |
